


**25. 09. 2025**

## தலைப்பு செய்திகள்

1. சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் நாட்டின் பொருளாதாரம் வலுப்பெறும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. பசுமையான இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு இன்றியமையாதது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில், நடப்பு கல்வியாண்டிற்கான புதுமைபெண், தமிழ் புதல்வன் திட்டங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கிவைக்கிறார்.

4. வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு அனைத்து சாலைப்பணிகளும் வரும் 15க்கும் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

5. கொழும்புவில் தெற்காசிய இளையோர் கால்பந்து சேம்பியன் பட்ட போட்டியின் அரையிறுதியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

************

**பிரதமர்**

சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் நாட்டின் பொருளாதாரம் வலுவடையும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உத்திபிரதேச மாநிலம் நொய்டாவில் சர்வதேச வர்த்தக கண்காட்சியை இன்று துவக்கிவைத்து பேசிய பிரதமர், சரக்கு சேவை வரி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என்றார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் நாட்டு மக்களின் வருவாய் மற்றும் சேமிப்பு அதிகரித்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

முன்னதாக இக்கண்காட்சியை பார்வையிட்ட பிரதமர் 2 ஆயிரத்து 250க்கும் மேற்பட்டோர் தங்களது படைப்புகளை காட்சிபடுத்தியுள்ளதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

தொடர்ந்து ராஜஸ்தானில் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை பிரதமர் இன்று தொடங்கிவைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இதனிடையே புதுதில்லியில் உலக உணவு கண்காட்சியை பிரதமர் இன்றுமாலை தொடங்கிவைக்கிறார்.

************

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், அரசின் வலுவான நிலைப்பாடுகளால் பாதுகாப்பு தளவாட உற்பத்தி மேம்படுத்தப்பட்டது குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

நாட்டின் ராணுவம் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பை தற்சார்பு பாதையில் மோடி அரசு உறுதியுடன் முன்னெடுத்து செல்கிறது.

உள்நாட்டு தளவாட உற்பத்தி, துணிச்சலான சீர்திருத்தங்களாலும், நவீன தொழில்நுட்பங்களாலும், வேகமான வளர்ச்சி கண்டு வருகிறது.

இதன்காரணமாக தளவாட இறக்குமதி நாடாக இருந்த இந்தியா, உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நாடாக வளர்ச்சி கண்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தளவாட ஏற்றுமதி 34 மடங்கு அதிகரித்து, 23 ஆயிரத்து 622 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

சென்ற ஆண்டு மட்டுமே ஆயிரத்து 700 ஏற்றுமதி ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

இந்தியா தற்போது, அமெரிக்கா, ஃபிரான்ஸ், அர்மேனியா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பெரிய அளவிலான ராணுவ ஆயுதங்களை ஏற்றுமதி செய்கின்றது.

ரோந்து கப்பல்கள், ஹெலிகாப்டர், ரேடார், குண்டு துளைக்காத ஆடைகள், அதி நவீன நீர்மூழ்கி தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை இவற்றில் அடங்கும்.

ஜம்மு காஷ்மீரின் கத்ராவில், கடந்த ஜூன் மாதம் பிரதமர் திரு.நரேந்திரமோடி, தளவாடம் சார்ந்த நிகழ்ச்சியில் உரையாற்றுகையில்,

உலகளாவிய பாதுகாப்பு ஏற்றுமதி நாடுகளில் இந்தியாவும் இடம்பெறுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த பாதுகாப்பு கொள்முதல், 2020ஆம் ஆண்டு சுய சார்பு பாதையில் ஆக்கப்பூர்வமான மாற்றம் கண்டுள்ளது.

பாதுகாப்பு வாகனங்களுக்கான உதிரி பாகங்களை தயாரிப்பது மகிழ்ச்சி அளிப்பதாக திருவள்ளூர் மாவட்டம் காக்களூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்க துணை தலைவர் திரு. சந்திரசேகர் தெரிவிக்கிறார்.

இந்த ஆக்கப்பூர்வமான மாற்றம், வளர்ச்சி அடைந்த பாரத பாதையில், நம் நாட்டை முன்னெடுத்து செல்வதற்கான, பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசின், உறுதியான முடிவை பறைசாற்றுகிறது.

************

**பிரதமர் - இந்தியாவில் தயாரிப்போம்**

இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் 11 ஆண்டுகளை இன்றுடன் நிறைவு செய்வதை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் இறக்குமதி நாடாக இருந்த இந்தியா இன்று, செமி கண்டெக்டர், மருந்துகள், பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கதக்க எரிசக்தி உள்ளிட்டவற்றில் உலகளாவிய ஏற்றுமதி நாடாக உருவெடுத்துள்ளதை குறிப்பிட்டுள்ளார்.

************

**ராஜ்நாத்சிங்**

தூய்மையான, பசுமையான இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்கள் மற்றும் ஆயுதபடைகளின் பங்கு இன்றியமையாதது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ராணுவ தலைமையகத்தில் சிறப்பு தூய்மை இயக்கத்தின் கீழ் இன்று நடைபெற்ற விழாவில் உரையாற்றிய அமைச்சர் நாட்டு மக்கள் அனைவரும் வாழ்க்கையின் ஒருபகுதியாக தூய்மையை கடைபிடிக்க வலியுறுத்தினார்.

தூய்மை பாரத இயக்கம் நாட்டின் தூய்மையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் தன்னார்வலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களை அமைச்சர் கவுரவித்தார்.

இதனிடையே ரயிலில் இருந்து செலுத்தக்கூடிய நடுத்தர தொலைவு அக்னி ப்ரைம் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளதற்கு அமைச்சர் விஞ்ஞானிகளை பாராட்டினார்.

************

**பண்டிட் தீன்தயாள்**

பண்டிட் தீன்தயாள் உபாத்யாயாவின் பிறந்தநாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்ட சமூகவலைதள பதிவில் மனித நேயத்தை முன்னெடுத்து செல்ல உந்துசக்தியாக திகழ்ந்தவர் என புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்நாளை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் தேசத்தின் நலனே லட்சியம் என வாழ்ந்த அன்னாரது தியாகங்களை போற்றுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

************

**சரக்கு சேவை வரி**

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிதாக்கியுள்ளது.

புதிய வரி கட்டமைப்பின் கீழ் இரண்டடுக்கு வரி முறை மட்டுமே நடைமுறைபடுத்தப்பட்டுள்ள நிலையில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான சரக்கு சேவை வரி 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரி குறைப்பால் மகிழ்ச்சி அடைவதாக திருப்பூர் சாயப்பட்டறை சங்கத்தலைவர் திரு.காந்தி ராஜன் தெரிவிக்கிறார்.

************

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் நடப்பு கல்வியாண்டிற்கான புதுமை பெண் தமிழ் புதல்வன் திட்டங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்றுமாலை தொடங்கிவைக்கிறார்.

இதன்மூலம் 2 லட்சத்து 57 ஆயிரம் மாணாக்கர் பயன்பெறுவர்.

தெலங்கானா முதலமைச்சர் திரு.ரேவந்த்ரெட்டி சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் இந்நிகழ்ச்சியில் அரசு பள்ளிகளிலிருந்து முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு சென்ற சாதனை மாணாக்கர், விளையாட்டு சாதனையாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இதனிடையே தஞ்சை புதுக்கோட்டை மாவட்டங்களில் அமைந்த பாக் வளைகுடாவில் நாட்டின் முதலாவது கடற்பசு பாதுகாப்பகத்திற்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்தமைக்கு முதலமைச்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

************

**தமிழக அரசு**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வரும் 15ஆம் தேதிக்குள் அனைத்து சாலைப்பணிகளையும் முடிக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழை அக்டோபர் 2ஆவது வாரம் தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ள நிலையில் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சென்னையில் மெட்ரோ ரயில் பணிகள் நடைபெறும் இடங்களில் தண்ணீர் தேங்குவதை தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 603 மோட்டார் பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

************

**ஆர்.என்.ரவி**

தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைகழத்தின் 16ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநரும், பல்கலைகழக வேந்தருமான திரு.ஆர்.என்.ரவி மாணாக்கருக்கு பட்டங்களையும் பதக்கங்களையும் வழங்கினார்.

சென்னையில் இன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி செழியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

************

**பன்னீர்செல்வம்**

சென்னையில் நாளை மறுநாள் தொடங்கும் வேளாண் வணிக திருவிழாவில் உழவர்கள் உட்பட அனைவரும் பங்கேற்க மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் அரசின் அனைத்து திட்டங்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள இக்கண்காட்சி வழிகோலும் என்றார்.

************

மா.சுப்பிரமணியன்

சென்னை மதுரவாயல் பகுதியில் கூவம் ஆற்றின் குறுக்கே 31 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்ட மேம்பாலத்தை மாநில அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் இன்று ஆய்வு செய்தார்.

இப்பாலம் நாளைமுதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படுகிறது.

************

கோ ஆப்டெக்ஸ்

திருச்சி பெரியகடை வீதியில் நவீனபடுத்தப்பட்ட கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று தொடங்கிவைத்தார்.

சிவகங்கை, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் கோ ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனை இன்று துவக்கிவைக்கப்பட்டது.

************

கே.பி.ராமலிங்கம்

நாட்டின் சரக்கு சேவை வரி சீரமைப்பின் மூலம் நாட்டு மக்கள் அனைவரும் பயனடைந்துள்ளதாக பிஜேபி மாநில துணைத்தலைவர் திரு.கே.பி.ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக பொருளாதார நிலையை மேம்படுத்தும் பணிகளில் மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

************

இருவரி

காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலையில் இந்தியன் வங்கி சார்பில் தூய்மையே சேவை இயக்க விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

மதுரை திருமங்கலத்தில் மத்திய அரசின் திட்டங்கள் குறித்த இரண்டு நாள் விழிப்புணர்வு முகாம் இன்று துவங்கியது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தில் ஊன் உண்ணிகள் கணக்கெடுப்பு குறித்த பயிற்சி இன்று வழங்கப்பட்டது.

************

**கால்பந்து**

கொழும்புவில் தெற்காசிய இளையோர் கால்பந்து சேம்பியன் பட்ட போட்டியின் அரையிறுதியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது. மற்றொரு அரையிறுதியில் பங்களாதேஷ் பாகிஸ்தானுடன் மோதுகிறது. இறுதிபோட்டி நாளை மறுநாள் நடைபெறும்.

************

**கிரிக்கெட்**

துபாயில் ஆசிய கோப்பை 20-20 கிரிக்கெட் சூப்பர் 4 சுற்றில் பங்களாதேஷ் இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றிபெறும் அணி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதிபோட்டியில் இந்தியாவுடன் மோத உள்ளது.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**